**செப்டம்பர் – 13**

# TNPSC துளிகள்

- இந்தியாவில் பிறந்த பெண் ஆராய்ச்சி அறிஞரான வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராஜலட்சுமி நந்தகுமார் 2018ஆம் ஆண்டிற்கான பால் பாரன் இளம் அறிஞர் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தென் கொரியாவின் சங்வோனில், நடைபெற்ற 52வது சர்வதேச துப்பாக்கி சுடுதல் பெடரேஷன் சாம்பியன்ஷிப்பில் இளம் ஆடவருக்கான துப்பாக்கி சுடுதல் போட்டியில் குர்னிகால் சிங் கர்ச்சா வெண்லப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனையான ஜுலன் கோஸ்சுவாமி சர்வதேச விளையாட்டுகளில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது பந்து வீச்சாளர் ஆவார்.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே உத்தி சார்ந்த பங்களிப்பை ஊக்கப்படுத்துவதற்காக இந்திய-ஐக்கிய அரபு நாடுகள் கூட்டாண்மை மாநாடு துபாயில் நடைபெறவிருக்கிறது (IUPS - India - UAE Partnership Summit).
- சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமானது உலகிலேயே தனது பெரிய கைபேசி விற்பனைக் கூடத்தை பெங்களுருவில் திறந்துள்ளது. இதற்குமுன் அந்நிறுவனம் நொய்டாவில் உலகின் மிகப்பெரிய கைபேசி தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்கியது.
- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் இந்தியத் தொல்லியல் ஆய்வகமானது (ASI - Archaeological Survey of India) கிர்கி பள்ளி வாசல் வளாகத்தில் (தில்லி) 254 செம்பு நாணயங்களைக் கண்டுபிடித்துள்ளது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சகமானது 328 கலப்பு மருந்துகளை (fixed Dose Combination) விற்பனை செய்வதற்காக அல்லது மனிதப் பயன்பாட்டிற்காக தயாரிப்பதைத் தடை செய்துள்ளது. இது உடனடியாக அமலுக்கு வரும் என்று அறிவித்துள்ளது.
    - மேலும் இது 6 கலப்பு மருந்துகளை சில நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை அல்லது பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படுவதை கட்டுப்படுத்துகிறது.
- சென்னை பெருநகரமானது நகரில் கூடுதலாக 8 மண்டலங்களில் கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
    - இதற்கு முன் அடையார், கோடம்பாக்கம் மற்றும் தேனாம்பேட்டை ஆகிய மண்டலங்களில் உருவாகும் கழிவுகள் தனியார் நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்றன.
- மின்னணு நிக்கோடின் வழங்கல் அமைப்புகள் (ENDS - Electronic Nicotine delivery Systems) அல்லது மின்னணு சிகரெட்டுகளை தயாரித்தல், விற்பனை செய்தல், வழங்குதல், வர்த்தகம் செய்தல், இறக்குமதி மற்றும் வைத்திருத்தலை தடை செய்து தமிழ்நாடு சுகாதார மற்றும் குடும்ப நல வாழ்வுத் துறையானது அரசாணை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் முதலாவது ஏவுகணை கண்காணிப்பு கப்பலான விசி 11184 ஐ கடல் சோதனையில் ஈடுபடுத்த இந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இது இந்தியாவின் இந்த வகையைச் சேர்ந்த முதலாவது கண்காணிப்பு கப்பலாகும்.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது (மின்னணு - ரைத்து) என்ற கைபேசி தளத்தைத்

தொடங்கியுள்ளது (தெலுங்கில் மின்னணு - விவசாயி). இது சிறு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்ததை நியாயமான விலையில் விற்பனை செய்ய உதவுகிறது.

- அருணாச்சலப் பிரதேச மாநில முதல்வர் பீமா காந்து அம்மாநிலத்தின் முதலாவது சைனிக் (இராணுவ) பள்ளியை நிக்லோக்கில் தொடங்கி வைத்தார். இந்தப் பள்ளி 60 மாணவர்களுடன் இந்த ஆண்டு ஆகஸ்ட் 27 தேதி முதல் செயல்படத் தொடங்கியது.
  - இது இளைஞர்கள் ஆயுதப் படையில் இணைந்து பணியாற்ற வாய்ப்பளிக்கிறது.
- அலிபாபா நிறுவனரான ஜேக் மா தனது ஓய்வை அறிவித்துள்ளார். மேலும் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 முதல் டேனியல் ஜாங் அந்நிறுவனத்தின் தலைவராக பதவியேற்பார் என்று அவர் அறிவித்துள்ளார்.
- 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த 'மார்பத்' திருவிழாவானது மகாராஷ்டிராவின் நாக்பூரில் கொண்டாடப்பட்டது.
- குஜராத் மாநில அரசு 'மிஷன் வித்யா'வை மீண்டும் தொடங்கியுள்ளது. இது ஒரு மாத காலத்திற்கு வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதத்தில் பின்தங்கியுள்ள ஆறு முதல் எட்டு வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு அவற்றை கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- கோவா மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது கடலோர பகுதிகளில் இடர்பாடுகளிலுள்ள பெண்களுக்காக உலகளாவிய உதவியளிக்கும் சேவை எண்ணை (181) தொடங்கியுள்ளது.
- மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இந்திய வம்சாவழி பேராசிரியரான அருள் சின்னய்யனுக்கு அமெரிக்க தேசிய புற்றுநோய் நிறுவனம் 'சிறந்த ஆராய்ச்சியாளர் விருதை' வழங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு - 5 விருதுகள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக (MGNREGA - Mahatma Gandhi National Rural Employment Guarantee Act) மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு 5 விருதுகளைப் பெற்றுள்ளது.
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு சட்டத்தின் நிர்வாகத்திற்கான சிறப்பு விருதை நகராட்சி நிர்வாகம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் S.P. வேலுமணி பெற்றார்.
- ஜியோ MGNREGA திட்டத்தின்கீழ் மக்களுக்கு ஆதாரை ஏற்படுத்தித் தருதல் மற்றும் மாற்றித் தருதல் ஆகியவற்றில் சிறப்பான செயல்பாட்டிற்காக மாநில அரசு (தமிழ்நாடு) விருது பெற்றது.
- கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் 7 திட்டங்களில் தன்னிறைவு அடைந்ததற்காக தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் தேசிய விருது பெற்றுள்ளது.
- தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக அம்மாவட்ட ஆட்சியாளர்களான அண்ணாதுரை மற்றும் கௌரவிக்கப்பட்டனர்.

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி அன்னதாதா ஆய் சன்ராக்ஷன் அபியான் (PM - AASHA)

- புதிய தலைமைத் திட்டமான "பிரதான் மந்திரி அன்னதாதா ஆய் சன்ராக்சன் அபியான்" திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது (PM - AASHA - Pradhan Mantri Annadata Aay Sanrakshan Abhiyan).
- இத்திட்டத்தின் நோக்கம் 2018ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு விவசாயிகள் தங்கள் உற்பத்திக்கு ஏற்ற விலையை உறுதி செய்வதாகும்.
- இந்தத் தலைமைத் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்ற விலையை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறை அடங்கியுள்ளது. அவையாவன
    - விலை ஆதாரத் திட்டம்
    - விலை பற்றாக்குறை பண வழங்கீடு திட்டம்
    - தனியார் கொள்முதல் மற்றும் இருப்பிற்கான சோதனைத் திட்டம்
- மத்திய உணவு மற்றும் பொது வழங்கீடுகள் துறை (DFPD - Department of food and Public Distribution) மற்றும் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் பருத்தி மற்றும் சணல் ஆகியவற்றிற்கு ஆதரவு விலை அளிப்பதற்கான மற்ற திட்டங்கள் தொடரும் என்று மத்திய அமைச்சரவை அறிவித்துள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் - மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- இந்தியா மற்றும் புரூணை தருசலாம் ஆகிய நாடுகளுக்கிடையேயான செயற்கைக் கோள் மற்றும் செலுத்து வாகனங்களுக்கான தொலைத் தொடர்பு கண்காணிப்பு மற்றும் தொலைதூர கட்டளையிடும் நிலையங்களின் செயல்பாடுகள் ஆகியவற்றின் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இரு நாடுகளுக்கிடையேயான விண்வெளி ஆராய்ச்சி, அறிவியல் மற்றும் பயன்பாடுகள் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் தென்-ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே அமைதியான பயன்பாடுகளுக்கான விண்வெளியைப் பயன்படுத்துதல் மற்றும் ஆய்வுப் பயணங்களில் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவையானது அமராவதி, விஜயவாடா, ஆந்திரப் பிரதேசம்; போபால், மத்தியப் பிரதேசம்; ஜோர்காத், அஸ்ஸாம்; குருஷேத்திரா, ஹரியானா ஆகிய இடங்களில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனங்களை தேசிய வடிவமைப்பு நிறுவனச் சட்டம் 2014-ன் வரம்பிற்குள் கொண்டுவரவும் இந்நிறுவனங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவிக்கவும் தேசிய வடிவமைப்பு நிறுவன

(National Institutes of Design) திருத்தச் சட்டம் - 2014ன் அறிமுகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## துரோணாச்சாரியா மற்றும் தயான்சந்த் விருதுகள் - தேர்வுக் குழு

- இந்த ஆண்டிற்கான துரோணாச்சாரியா மற்றும் தயான்சந்த் விருதுகள் பெறுவோரை தேர்வு செய்வதற்கான 11 பேர் கொண்ட தேர்வுக் குழுவின் தலைவராக நீதிபதி முகுல் முத்கல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய உயர் நீதிமன்றங்களில் பணியாற்றிய முன்னாள் தலைமை நீதிபதி ஆவார்.
- தயான்சந்த் விருது விளையாட்டுகளில் வாழ்நாள் சாதனை படைத்தவர்கள் மற்றும் பங்களிப்பை ஏற்படுத்திய சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது விளையாடிக் கொண்டிருக்கும் போதும் ஓய்வு பெற்ற பின்பும் வழங்கப்படும்.
- துரோணாச்சாரியா விருது நான்கு ஆண்டு காலகட்டத்தில் சிறப்பான மற்றும் தகுதி வாய்ந்த பணிக்காக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

## மக்களவையின் நெறிமுறைகள் குழு - தலைவர்

- மக்களவையின் நெறிமுறைகள் குழுத் தலைவராக எல்.கே. அத்வானி மறுமுறையும் லோக்சபாவின் சபாநாயகரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் தவறான நடத்தை தொடர்பான புகார்கள் குறித்து இக்குழு ஆராயும்.
- இக்குழு உறுப்பினர்களின் நெறிமுறை மற்றும் நெறிமுறையற்ற செயல்கள் தொடர்பாக தாமாகவே முன் வந்து புகாரை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

- - - - - - - - - - - - - -